# DEPOSITION OF WITNESS

**In the court of Sub Court, Eraniel**
**S.C.No.371/2023**
**Prosecution Witness - PW1**

| | |
|---|---|
| Name | : திரு. ஜான் ஜெயசேகர். |
| Father's Name | : |
| Age | : |
| Calling | : |
| Village | : |
| Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 30.04.2024.

(Accused is present).

முதல் விசாரணை–

நான் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுனராக திங்கள் நகர் பணிமனையில் பணிபுரிந்து வருகிறேன். சாட்சி குணசீலன் என்பவர் என்னுடன் பணிபுரியும் ஓட்டுனர் ஆவார். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். 31.12.2002 அன்று குளச்சல் பணிமனையில் இருந்து சென்னைக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பதிவு எண். டி.என்.74 0474 என்ற பேருந்தை நான் செட்டியார்மடம் அருகில் ஓட்டி வரும் போது மதியம் 01.45 மணியளவில் ஆஜர் எதிரி பேருந்தின் குறுக்கே வந்து பேருந்தை நிறுத்தினார். பின்னர் பேருந்தின் வலது பக்க கண்ணாடியை கையால் உடைத்தார். பிறகு எதிரி அங்கிருந்து ஓடினார். அவரை நான், என்னுடன் வந்த மற்றொரு ஓட்டுனரான குணசீலன் மற்றும் பயணிகள் சிலர் சேர்ந்து விரட்டி பிடித்தோம். பின்னர் ஆஜர் எதிரியை பேருந்தில் ஏற்றி இரணியல் காவல் நிலையத்திற்கு கொண்டு வந்து ஒப்படைத்தோம். அதன் பிறகு காவல் நிலையத்தில் புகார் எழுதிக் கொடுத்தேன். பிறகு பேருந்தை எடுத்துக் கொண்டு சென்னைக்கு பணிக்குச் சென்று விட்டேன். நான் கொடுத்த புகார் மனு அ.சா.ஆ.1. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)

சம்பவத்தன்றே காவல் நிலையத்தில் வைத்து போலீசார் என்னை விசாரித்தனர். போலீசார் என்னை விசாரிக்கும் போது மணி பகல் 02.00 மணி இருக்கும். குளச்சல் பணிமனையில் இருந்து பேருந்தை சென்னை செல்வதற்கு நான் எடுத்த போது மணி பகல் 01.30 மணி இருக்கும். நான் சம்பவத்தன்று மேற்படி பேருந்தில் ஓட்டுனராக பணியில் இருந்தேன் என்பதற்கு போலீசாரிடம் ஆவணம் எதுவும் கொடுக்கவில்லை. சென்னை செல்வதற்கு குளச்சலில் 15 பயணிகள் பேருந்தில் ஏறினார்கள். சம்பவத்தன்று அதிகாலை 05.00 மணியளவில் இரணியல், ஆமத்தான் பத்தை இறக்கத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த பேருந்து ஒன்று ஆட்டோ ஓட்டுனர் அசோகன், ஆட்டோவில் பயணம் செய்த முருகன் மற்றும் அவரது உறவினர் ஆகியோரை ஏற்றி அவர்கள் இறந்துவிட்டதாக இரணியல் காவல் நிலையத்தில் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் அது எனக்குத் தெரியாது. அதன் காரணமாக திங்கள் நகர் பேருந்து நிலைய ஆட்டோ ஓட்டுனர்கள் அரசு போக்குவரத்துக் கழக ஓட்டுனர்களை எதிர்த்து தர்ணா போராட்டம் செய்தார்கள் என்றால் அது எனக்குத் தெரியாது. குளச்சலில் இருந்து கிளம்பி செட்டியார்மடம் வரும் போது மணி பகல் 01.45 மணி இருக்கும். ஆஜர் எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரியின் ஊர் எது என்று எனக்குத் தெரியாது. ஆஜர் எதிரியின் ஊர் செட்டியார்மடம் என்றாலும் அங்கு அவர் பெட்டிக் கடை வைத்து பிழைத்து வருகிறார் என்றாலும் அது எனக்குத் தெரியாது. பேருந்தின் கண்ணாடி உடைந்ததற்கு சேத மதிப்பு எவ்வளவு என்று எனக்குத் தெரியாது. காவல் நிலையத்தில் கண்ணாடி உடைந்ததை புகைப்படம் எடுக்கவில்லை. போலீசார் விசாரிக்கும் போது கண்ணாடியை உடைக்கும் போது ஆஜர் எதிரிக்கு கையில் காயம் ஏற்பட்டதாக சொன்னேன். அதில் கையிலும் பேருந்திலும் இரத்தம் பட்டது. போலீசார் பேருந்தில் இரத்தம் பட்டிருந்ததை பார்த்தார்கள். எதிரியை கையில் ஏற்பட்ட காயத்திற்காக மருத்துவ சிகிச்சைக்கு போலீசார் அனுப்பினார்களா என்று எனக்குத் தெரியாது. மேற்படி விபத்து தொடர்பாக ஆட்டோ ஓட்டுனர்கள் போராட்டம் நடத்தியதால் சம்மந்தமே இல்லாத பெட்டிக்கடை வைத்துள்ள எதிரி மீது நான் பொய்யாக நடக்காத சம்பவத்திற்கு புகார் கொடுத்தேன் என்றால்

சரியல்ல. சம்பவம் குறித்து பேருந்தில் பயணம் செய்த பயணிகளை ஆய்வாளர் விசாரித்தார். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் உள்ள நபர்கள் சம்பவத்தை பார்த்தார்களா என்று எனக்குத் தெரியாது. நான் ஓட்டி வந்த பேருந்திற்கு ஏற்பட்ட சேதத்திற்கும் ஆஜர் எதிரிக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**